**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No. 32/2025**

**வழக்கு சாட்சி PW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **முருகேஷ் ராஜா** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : மார்க்க சகாயம் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : காமனூர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 62/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 31.08.2026 |

**( எதிரிகள் A1, A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை )**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் காமனூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் . இவ்வழக்கின் புகார்தாரரான சங்கிலியை எனக்குத் தெரியும். தேதி நினைவில்லை. சுமார் 4 வருடத்திற்கு முன்பு பகல் 11.00 மணியளவில் காமனூரில் உள்ள எனது வீட்டில் நான் இருந்தபோது வெடி சத்தம் கேட்டது . அப்போது கல் ஒன்று ஊருக்குள் வந்து விழுந்தது . பெரிய வெடி சத்தம் கேட்டவுடன் , நாங்கள் ஒன்றுகூடி கிராம நிர்வாக அலுவலர் சங்கிலியிடம் சம்பவம் குறித்து முறையிட்டோம். யார் வெடி வைத்தார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது , ஆனால் ஊருக்குள் கல் வந்து விழுந்த விபரம் மட்டும் தெரியும் . சம்பவம் தொடர்பாக ஊர்த்தலைவர் ராஜேந்திரன் தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பொதுவாக பாறையை உடைக்கும்பொழுது பாறையில் துளையிட்டு வெடி மருந்துகள் நிரப்பி வெடிக்கச்செய்வார்கள் என்றால் சரிதான். வெடி வைத்து பாறையை வெடிப்பார்கள் என்றுத் தெரியும், ஆனால் அதன் செயல்முறை விபரங்கள் எனக்குத் தெரியாது. JCB இயந்திரத்தை பொதுவாக கல், மண் ஆகியவற்றை அள்ளவும், பாதையை சீர்செய்யவும் மட்டும் தான் பயன்படுத்துவார்கள் என்றாலும், JCB இயந்திரம் கொண்டு பாறையை உடைக்கமுடியாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலம் முதல் நீதிமன்றத்திற்கு என்னை அழைப்பாணையில்பேரில் அழைத்த இடைப்பட்ட காலம் வரை என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.08.31 18:15:42 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.